**தலைப்பு 155 – உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது

எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றின் பிரகாரம் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 9,027.80 மில்லியன் தொகையாக இருந்த போதும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 9,031.13 மில்லியன் தொகையாக ரூபா 3.33 மில்லியனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 3.33 மில்லியனால் குறைவடைந்திருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரி கணக்கு கூற்றுக்களுக்கும், நிதிச் செயலாற்றல் கூற்றுக்களுக்கும் இடையே மீண்டெழும் செலவினத்தின் வேறுபாடு ரூபா 3.33 மில்லியனாக இருந்ததுடன் அந்த வேறுபாடு உள்ளக அலுவல்கள் பிரிவின் கணக்கில் சீராக்கப்படாமையாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றின் எண்ணிக்கை திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டின் போது திறைசேரி இறுதி கணக்குக் கூற்றின் பிரகாரம் முற்பண கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துதல்கள் முறையே ரூபா 443.83 மில்லியன் மற்றும் 1,810.62 மில்லியன் ஆக இருக்க வேண்டிய போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது முறையே ரூபா 448.00 மில்லியன் மற்றும் ரூபா 1,786.85 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 4.17 மில்லியனினால் அதிகரித்தும் முற்பண செலுத்துதல்கள் ரூபா 23.77 மில்லியனால் குறைத்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | உங்களது கணக்காய்வு ஐய்யவினாவில் முற்பண பெறுவனவுகள் மற்றும் செலுத்துதலாக முறையே ரூபா 448.83 மில்லியன் மற்றும் ரூபா 1,810.62 மில்லியன் ஆக குறிப்பிடப்பட்ட போதிலும், திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 443.83 மில்லியன் ஆக சரியாக இருக்க வேண்டும். முற்பண பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடும் போது ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பெறுவனவுகள் ரூபா 4.17 மில்லியன் அதிகரித்தும் முற்பண செலுத்துதல்கள் ரூபா 23.73 மில்லியன் குறைத்தும் பதியப்பட்டுள்ளது. |
| (இ) | மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்ட படி சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் பொது வைப்புக் கணக்கின் முற்பண | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்கள் ரூபா 6.39 மில்லியன் குறைவாக பதியப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவுகள் ரூபா 6.39 மில்லியன் மற்றும் செலுத்துதல்கள் ரூபா 6.39 மில்லியன் ஆக நிதிச் செயலாற்றல் கூற்றில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய வருமானங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ஏனைய பெறுவனவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். அமைச்சின் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய வருமானம் கணக்கீட்டு உத்யோகத்திற்குரிய வருமான குறியீடு 09 இன் கீழ் அமைச்சு சேகரித்த வருமானம் ரூபா 78.23 மில்லியன் ஆக காணப்பட்டது. எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அந்த பெறுவனவுகள் ரூபா 86.54 மில்லியனாக ரூபா 8.31 மில்லியன் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவாக முற்பணம் “பீ” கணக்கில் வட்டி வருமானம் காண்பிக்கப்பட்டிருந்தது. வருமானக் கணக்கு மற்றும் செலவின் விடயங்களின் மிகை கட்டணமிடல் போன்றவையாக கிடைத்த நிதி ரீதியான பெறுவனவுகள் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயக் குறியீட்டின் கீழ் ஒவ்வொரு செலவின விடயங்களுக்காகவும் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையேயான வேறுபாடு மற்றும் இந்த வேறுபாடு மொத்த நிதி ஏற்பாட்டில் 5 சதவீதம் அல்லது ரூபா 10,000 என்ற இரண்டில் அல்லது அதிகரித்த தொகையில் பங்களிப்பினை விட அதிகரிக்குமாயின் அதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய காரணம் ACA 2II இல் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், செலவின விடயக் குறியீடு 112 இன் நிதி ஏற்பாடு குறித்த எல்லையினை விட அதிகரித்து சேமிக்கப்பட்டிருக்கும் போது காரணம் காண்பித்து ACA 2II படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | பிரதான அலுவலக கணக்குகளுடன் உப அலுவலகங்களின் கணக்குகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன்,A CA-2II இற்குரிய விபரங்கள் அந்த உப அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய தொகை திறைசேரி இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட மீதியினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 1,496.23 மில்லியனாக இருந்த போதும், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா 509.40 மில்லியன் குறைவாக ரூபா 986.83 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுகளில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,496.23 மில்லியன் ஆக குறிப்பிடப்பட்ட போதிலும், உப அலுவலகங்களின் ஆதனங்கள், பொறிகளின் உள்ளபடியான பெறுமதி பின்வருமாறு இருந்தது.<br><br>உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை பிரிவு- ரூபா 510.94 மில்லியன்<br><br>உள்நாட்டு அலுவல்கள் பிரிவு ரூபா 434.31 மில்லியன்<br><br>உள்ளக நடவடிக்கைகள் பிரிவு ரூபா 41.58 மில்லியன்<br><br>அதன் பிரகாரம் உள்ளபடியான ஆதனங்கள், பொறிகளின் பெறுமதி 986.83 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகும். உரிய வேறுபாட்டிற்காக காரணங்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வழுவினால் ஏற்பட்டமையால் அதனை சரி செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ஆதனங்கள், பொறிகளின் மீதி சரியானதாகும். |
| (ஆ) | மேலே சுற்றறிக்கையில் 7(V) ஆம் பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் பெறுமதி பெறப்பட வேண்டிய முறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 915,819 தொகை குறைவாக ரூபா 1,190.00 மில்லியன் தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | தேர்தல் கடமைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 0.9 மில்லியன் தொகை தீர்க்கப்படாத முற்பணமாக காணப்படுகின்றமையால் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி சரியானதாகும். |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சின் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 78.10 மில்லியனாக இருந்த போதும், அது காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலில் ரூபா 7.47 மில்லியன் தொகை அதிகரித்து ரூபா 85.57 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவாக முற்பண கணக்கின் "பீ" கணக்கில் வட்டி வருமானம் காண்பிக்கப்பட்டுள்ளது. வருமான கணக்கிலும், செலவின விடயத்தின் மிகைக் கட்டணமிடலுக்கு உரியதாக கிடைத்த நிதி ரீதியான பெறுவனவாகும். |
| (ஆ) | ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ஆளனி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினம் நிதி உதவிகள் மற்றும் மாற்றல்கள் ஏனைய செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் முறையே ரூபா 3,258.58 மில்லியன், ரூபா 163.51 மில்லியன் மற்றும் ரூபா 202,661.96 மில்லியன் ஆக காணப்பட்டது. எனினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட பணம் முறையே | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | உங்களது கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் ஆளனி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினம், நிதி உதவிகள் மாற்றல்கள் மற்றும் ஏனைய செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களாக குறிப்பிடப்பட்ட தொகை பிழையானதாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 691.98 மில்லியன், ரூபா 142.47 மில்லியன் மற்றும் ரூபா 202,645.09 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 2,604.50 மில்லியன் தொகை குறைவாக ரூபா 203,492.24 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | இருந்ததுடன், அந்த தொகை ரூபா 203,478.42 மில்லியனாக சரியாக இருக்க வேண்டும். அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளாக குறிப்பிடப்பட்ட ரூபா 203,479.54 மில்லியன் தொகை மற்றும் ஒன்றிணைந்த வரிவான பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட ரூபா 203,478.42 மில்லியன் தொகை என்பவற்றுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் குறுக்குப் பதிவுகளின் மூலம் கணக்கு வைக்கப்பட்ட பெறுமதியாகும். |
| (இ) | ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவிடல்கள் ரூபா 47.95 மில்லியன் ஆக இருந்த போதும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசுப் பாய்ச்சலில் அந்த பெறுமதி ரூபா 24.84 மில்லியன் தொகை குறைவாக ரூபா 23.11 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு அடிப்படையிலான விடயங்கள் மட்டுமே பதிவிடப்படுகின்றது. அதன் பிரகாரம் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட ரூபா 47.96 மில்லியன் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியான ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 23.11 மில்லியன் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டுக்கான காரணங்கள் குறுக்குப் பதிவுகளாக உள்ளடக்கப்பட்ட பெறுவனவுகளாகும். |
| (ஈ) | ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண செலுத்துதல்கள் மற்றும் பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல்களாக முறையே ரூபா 66.93 மில்லியன் மற்றும் ரூபா 13.58 மில்லியன் என்பன செலவிடப்பட்டிருந்த போதும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலில் அப்பெறுமதி முறையே ரூபா 51.23 மில்லியன் மற்றும் ரூபா 2,539.60 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | உங்களின் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட முற்பண செலுத்துதல்கள் ரூபா 66.94 மில்லியன் மற்றும் காசுப் பாய்ச்சலில் குறிப்பிடப்பட்ட முற்பண செலுத்துதல்கள் ரூபா 51.23 மில்லியன் என்பவற்றுக்கிடையான வேறுபாடுகளுக்கான காரணம் குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாகும். அவ்வாறே பௌதீக சொத்துக்களை கைப்பற்றுதலாக ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்ட ரூபா 13.58 மில்லியன் மற்றும் காசுப் பாய்ச்சலில் குறிப்பிடப்பட்ட ரூபா 2,539.60 மில்லியன் என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | வேறுபாட்டிற்கான காரணங்களாக செலவின விடய இலக்கம் 2102, 2103 இன் கீழ் கைப்பற்றல்கள் தவிர ஏனைய சகல மூலதன செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல்களாக உள்ளடக்கப்பட்டிருந்தமையாகும். |
| (உ) | ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 124.08 மில்லியன் மற்றும் ரூபா 207.14 மில்லியன் ஆக இருந்தது. எனினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சலின் பிரகாரம் வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 32.12 மில்லியன் மற்றும் ரூபா 191.99 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | காசுப் பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட வைப்புப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறுக்குப் |

| | | |
|---|---|---|
| | | பதிவுகளாக உள்ளடக்கப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகும். |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,421.90 மில்லியன் ஆக இருந்த போதிலும், இணக்கக் கூற்றின் பிரகாரம் வரவு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,405.39 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 16.51 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது. | வரவு மீதியின் கூட்டுத் தொகையில் உள்ளடக்கப்பட்ட மீதியை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்புக்கள் என்பவற்றுக்கிடையே ரூபா 3.76 மில்லியன் வேறுபாடு காணப்பட்ட போதிலும், அதற்காக நிதிப் பிரமாணம் 427(4) இன் பிரகாரம் மற்றும் 2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 அம் இலக்க அரச | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

கணக்குகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அந்த வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குகின்ற இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6.5 பதிவேடுகள் பத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2019 மார்ச் 13 ஆம் திகதிய கடிதத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வளர்ச்சியடைந்து வருகின்ற வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டியிருந்ததுடன் அதன் 3 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக தனியான பதிவொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படக் கூடிய செலவின விடயங்களான 2101, 2102 மற்றும் 2103 இன் கீழ் வருகின்ற வாகன கொள்வனவு செய்தல் மாத்திரம் ஆனமையால் ஏனைய செலவின விடயங்களின் கீழ் கொள்வனவு செய்யப்படுன்ற வாகனங்களை உள்ளடக்கும் இயலுமை காணப்படவில்லை. |

### 1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர்காலதததில் சரிசெய்வதற்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br><br>2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| (i) | 2.3.3(c) ஆம் பந்தி | அரசாங்க சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பதில் கடமை பதவியொன்றில் மாத்திரம் ஈடுபட முடியுமாக இருந்த போதிலும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வட மத்திய, ஊவா போன்ற மாகாணங்களில் உள்ளூராட்சி ஆணையாளர் இந்த அமைச்சின் கீழ் | சட்டங்கள் விதிகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளங்களை அறவிட்டு நியமனங்களை முறைமைப்படுத்தி சுற்றறிக்கை ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதம செயலாளரினால் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்ததா என்பதை கண்டறிந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு செயற்திட்ட பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமுல்படுத்தப்படுகின்ற புறநெகும செயற்திட்டம் வளர்ச்சியடைந்து வருகின்ற வலயங்களின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களின் மாகாண பணிப்பாளர்கள் மற்றும் பிரதி பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 2.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | 6.1 ஆம் பந்தி | செயற்திட்ட செயற்பாட்டுக் குழுவினால் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பணிகளுக்காக தேவையானது என பரிந்துரை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான பரிந்துரையை பெற்றுக் கொள்ளாமல் ரூபா 4.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் உடன்படிக்கையின் இணைப்பான செயற்திட்ட பணி கோவையில் இந்த பயிற்சி விபரங்கள் காண்பிக்கப்பட்டமையினால் விஷேட அங்கீகாரம் ஒன்று தேவையற்று இருந்தது. |
| (iii) | 6.2 ஆம் பந்தி | வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் போது செயற்திட்டத்தின் தேவையின் அடிப்படையில் தெரிவு செய்தல் இடம்பெற வேண்டியிருந்த | சுற்றறிக்கை ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறைவேற்றுகின்ற கடமையின் அடிப்படையில் செயற்திட்ட பதவி அணியினர் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் ஏனைய பதவி |

| | | |
|---|---|---|
| | போதிலும், செயற்திட்டத்தின் பணிகளுக்காக தொடர்பற்ற அமைச்சு உத்தியோகத்தர்களும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்ற செய்யப்பட்டிருந்தனர். | அணியினரை தெரிவு செய்தல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2019 மார்ச் 13 ஆம் திகதிய BD/GPS/155/08/03 ஆம் இலக்க கடிதத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற வலையங்களின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கியின் நிதி குத்தகை வசதிகளின் கீழ் 10 கெப் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை வட்டி செலவின | செலவின விடயம் 1406 மற்றும் 2108 இல் குறிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு மிகுதி கொடுப்பனவுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும். | தேசிய பாதீட்டு திணைக்களத்திடம் விசாரணை செய்து மிகுதி நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | விடயம் 1406 இன் கீழ் செலுத்துவதற்கும் மூலதன தவணை செலவின விடயம் 2108 இன் கீழ் கொடுப்பனவுகளை செய்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், உரிய செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.<br>பிரதான நிதி உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செயலிவனத்தின் கீழ் குத்தகை வட்டி ரூபா 4.61 மில்லியன் மற்றும் மூலதன செலுத்துதல்கள் ரூபா 7.20 மில்லியன் என்பன மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயற்பாட்டு பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளின் கீழ் 20 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய மொத்த நிதி ஏற்பாடான ரூபா 1,256.52 மில்லியன் தொகையில் ரூபா 1,064.96 மில்லியன் தொகைகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 84.75 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது, நிதிப் பிரமாணம் 50 இன் மூலம் மேவுகை செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | பாதீட்டு சுற்றறிக்கை 03/2019 மற்றும் 05/2019 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட்டுள்ளது.<br>அவ்வாறே பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 04/2019 மற்றும் 07/2019 இன் பிரகாரம் நிதி வினைத்திறனை பேணிச் செல்லல் மற்றும் உரிய பிரகாரம் செலவினங்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | கட்டுப்படுத்தும் நியதிகனை ஈடுபடுத்துதல் அந்த நியதிகளின் மூலம் செலவின கட்டுப்பாட்டை செய்கின்றமையால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் சேமிப்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் கட்டுநிதி தேவையின் பிரகாரம் கட்டுநிதி விடுவிக்கப்படாமையினால் கடந்த ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தமையும் மேற்கூறப்பட்ட சேமிப்புக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. |
| (இ) | செயற்பாட்டு பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளின் கீழுள்ள 16 மூலதன செலவின விடயங்களுக்குரிய மொத்த நிதி ஏற்பாடான ரூபா 5,181.96 மில்லியன் மொத்த தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. | குறித்த பிரகாரம் நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இராஜாங்க அமைச்சின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் குறைபாடுகளுடன் (வளர்ச்சியடைந்து வருகின்ற) பிரதேசங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி |

செயற்திட்டத்தின் கொடுப்பனவுகளுக்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை, சுகாதாரப் பிரிவு அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய கட்டுநிதி கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமை, கொழும்பு மாநகர சபைக்காக தேவையான தீயணைப்பு வாகன உபகரணங்களை வழங்குதல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கழிவுப் பொருட்களை சேகரிக்கும் கம்பெக்டர் வாகனத்தை வழங்குதல் போன்ற செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை, பொது கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்கு தேவையான நிதி கிடைக்கப்பெறாமை, பெரும்பாக கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் ஒப்பந்தத்தை கையளித்தல் தாமதமடைந்தமை, மட்டக்களப்பு நகர சபையின் பொது நூலகம் நிர்மாணிக்கும்

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்திட்டத்தின் கீழ் ஏனைய திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் செலவிடப்படாமை மற்றும் கிராமிய பாலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் செலவினங்கள் என்பவற்றிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமை போன்ற காரணங்களினால் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | செயற்பாட்டு பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளின் கீழ் 42 மூலதன செலவின விடயங்களுக்குரிய மொத்த நிதி ஏற்பாடு ரூபா 8,937.45 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 6,170.74 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 69.04 சதவீதமாக காணப்பட்டது. | குறித்த பிரகாரம் நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலே ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ மூலமும் விபரிக்கப்பட்ட பிரகாரம் பட்டியல் சமர்ப்பக்கப்படாமை, கட்டு நிதி கிடைக்கப் பெறாமை, பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை போன்றவற்றின் காரணமாக இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | மீளாய்வாண்டின் மூலதன மாற்றல்கள் ரூபா 754.19 மில்லியனாக காண்பிக்கப்பட்ட போதிலும், ஆண்டின் உள்ளபடியான மூலதன | முறையான பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும | ACA 2(i) இல் குறிப்பிடப்பட்ட 12 ஆம் இலக்க செலவின விடய இலக்கம் 2202 அபிவிருத்தி உதவியாக |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றல்கள் ரூபா 23.96 மில்லியனாக இருந்தது. அந்த செலவினங்கள் 155-1-2-2201 இன் கீழ் உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்திற்கு மாற்றப்பட்டவையாகும். மூலதன மாற்றுதல்கள் அல்லாத மூலதன செலவினங்கள் மூலதன மாற்றங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | உள்ளடக்கப்பட்ட செலவினங்கள் மூலதன மாற்றல்களின் கீழ் உள்ளடக்க வேண்டியதாகும். அதன் பிரகாரம் உரிய செலவின விடயங்களின் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களின் சகல செலவினங்களும் ரூபா 754.19 மில்லியன் மூலதன மாற்றல்களாக உள்ளடக்கப்பட்டிருந்தது . |
| (ஊ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 6 ஆவது பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் நிதி கூற்று தயாரிகப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்களின் இலக்கம் ஏசீஏ 2 III இன் மூலம் தமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப மற்றும் திருத்த செலவின மதிப்பீடுகளுக்குரிய முரண்கள் விளக்கமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | பிரதான அலுவலக கணக்குகளுடன் உப அலுவலக கணக்குகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ACA 2-iii இற்குரிய விபரங்கள் அந்த உப அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது உள்ளாட்டு அலுவல்கள் பிரிவு நிதிப் பிரமாணம் 216(அ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 166.63 மில்லியன் தொடர்பான பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 216(அ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி பிரமாணம் 94(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த மீண்டெழும் வழங்கல்கள் தொடர்பாக அடுத்த நிதியாண்டின் பொறுப்புக்களில் இடுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பொறுப்புக்களுக்காக வழங்கப்பட்ட மூன்று வருடத்தினுள் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அளவில் 50 சதவீதத்தை விஞ்சாத எல்லையில் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். |

### 2.3 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மாகாண சபைகள் உள்ளூராட்சிப் பிரிவு இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 23 மில்லியன் தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிப் பொறுப்புக்களை மேற்கொண்டதன் பின்னர் எதிர்பார்த்த பெறுபேறுகளை உள்ளக்கும் வகையில் தூரநோக்குகள் மற்றும் இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், எதிர்பார்த்த பெறுபேறுகளை உள்ளடக்கும் வகையில் தூர நோக்குகள் மற்றும் இலக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் பெற்றுக் கொள்ளப்படாமை

---

நகர கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தியில் மிகுதி நடவடிக்கையாக நாளொன்றுக்கு 50 தொன் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி 17 தொன் கூட்டுப்பசளை உற்பத்தி இயலளவுடன் ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட 09 கூட்டுப்பசளை இயந்திரங்கள் மாகாண மட்டத்தில் ஸ்தாபிப்பதற்கு 2017 யூலை மாதம் 19 ஆம் திகதிய அமப/17/1375/744/005-II/ரீபீஆர் இலக்கம் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா 935.69 மில்லியன் செலவில் 09 கூட்டுப்பசளை இயந்திரங்கள் முறையான பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இயந்திரங்களை பொருத்துவதற்காக கட்டிடங்களை நிர்மாணிக்கும் 09 ஒப்பந்தங்கள் ரூபா 733.26 மிலலியனுக்கு 06 ஒப்பந்தகாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------------- | --------------- | ----------------------------------- |
| (அ) | CP/2017/04 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் ஒரு இயந்திரத்தின் வருடாந்த நிதி இலாபம் ரூபா 80 மில்லியனாக இருந்ததுடன் நாளொன்றுக்கு இயந்திரமொன்றின் கூட்டுப் பசளை உற்பத்தி இயலளவு 17 தொன் ஆகும். லங்காபுர, தம்புள்ளை மற்றும் குருநாகல் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட கூட்டுப்பசளை உற்பத்தி இயந்திரங்கள் பாவனைக்கு எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டில் கூட்டுப்பசளை | இலக்கிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியொன்று இடம் பெறாமையின் காரணமாக எந்தவொரு இலாபத்தையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 09 இயந்திரங்களில் 06 இயந்திரங்கள் இது வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்து ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மேல் மாகாண மற்றும் ஊவா மாகாணங்களில் இந்த இயந்திரங்களை பொருத்துவதற்காக தேவையான காணிகளை விடுவித்துக் கொள்ளாமையன் காரணமாக இயந்திரங்களை கொள்வனவு செய்து ஒரு வருடத்தின் பின்னர் அந்த இரண்டு இயந்திரங்கள் காலி மற்றும் நாத்தான்டி போன்ற பிரதேசங்களின் பொருத்துவதற்காக இரண்டு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் பயனற்று காணப்படுகின்றமையினால் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது மக்களின் எதிர்ப்புக்களின் காரணமாக முதலில் தெரிவு செய்யப்பட்ட இடங்களை மாற்ற வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வடமராட்சி, அம்பாந்தோட்டை, கேகாலை போன்ற இடங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் செயல்முன்னேற்றம் மிகவும் மந்த நிலையில் காணப்பட்டதுடன், உடன்படிக்கைக் காலத்தில் வேலையை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு விளைவற்று காணப்படுகின்றமையினால் உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வடமராட்சி தளத்தில் வேலை பூர்த்தி செய்யப்படும் கட்டத்தில் காணப்பட்டதுடன் அம்பாந்தோட்டை உற்பத்தி நடவடிக்கைகள் 2020 யூன் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கேகாலை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

**3.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட 06 நிர்மாண செயற்திட்டங்களில் ரூபா 121.8 மில்லியன் தொகையான செலவினம் செய்ததன் பின்னர் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன. | செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணித்தலுக்குத் தேவையான பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமை, காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் பொத மக்களின் எதிர்ப்புக்களின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. |

**3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டு பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டங்களில் சிவனொளிபதாம், மடு தேவாலயம் மற்றும் கோணேஸ்வரம் கோயில் யாத்திரிகர்களுக்கான வசதிகள் நிலையங்களை நிர்மாணித்தல் உள்ளடக்கப்பட்டிருந்தது. கோணேஸ்வரம் வசதிகள் நிலையத்தின் நிர்மாணிப்புக்கள் தொடர்பான மதியுரை கம்பனியான கட்டிட திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல் தவிர மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களின் எந்த வித செயல் முன்னேற்றத்தையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்த காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் உள்ளக நடவடிக்கைகள், உள்நாட்டு அலுவல்கள், மாகாண | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் போன்ற சகல பிரிவுகளையும் உள்ளடக்கி அமைச்சிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவினாலும் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் பிரிவினாலும் தனித்தனியாக இரண்டு செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |

## 3.6 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மாகாண வீதி அபிவிருத்தி பிரிவு. | | |
| (i) 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய அமப/18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் தகுதியான உத்தியோகத்தர்கள் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்கும், செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவுகளுக்கும் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக செயற்திட்ட | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் அமைச்சரின் தீர்மானத்தை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப செயற்திட்டத்தின் நிதி உடன்படிக்கையின் இணைப்பு 03 இன் 25 ஆம் பந்தியில் செயற்திட்டம் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தரின் சம்பளம் செலுத்துதல் உள்நாட்டு நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 இன் வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ அலுவலகத்திற்கு அமைச்சின் ஊழியர்கள் அல்லாத வெளி நபர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 9.65 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் முதலாவது பகுதியின் 2 ஆம் கட்டத்திற்குரிய வீதி நிர்மாணிக்கும் 18 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 07 ஒப்பந்தங்கள் மாத்திரம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர்களின் நான்கு பேருக்கு ஆரம்ப முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப செயற்திட்டங்கள் தொடர்பாக எந்தவித பௌதீக செயல் முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினர் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முதலாவது கட்டத்திற்குள் 08 வீதி ஒப்பந்தங்களுக்காக நிதி ஏற்பாடு அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் பின்பு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு அதில் 07 இற்காக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 08 ஆவது தொகுதிக்காக மேலதிக விடயங்கள் கோரப்பட்டமையினால் அந்த தொகுதியை கையளித்தல் தாமதமடைந்தமைக்கான காரணமாகும். |
| (ஆ) | **கிராமிய பால செயற்திட்டம் (RSB)** | | |
| (i) | ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து போன்ற நாடுகளின் தனியார் வங்கிகளில் இருந்து அந்த நாடுகளின் ஏற்றுமதி அபிவிருத்திக் கடனாக வழங்கப்பட்ட கடன் பணத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பாலங்களுக்காக இடங்களை தெரிவு செய்தல் தொடர்பாக | வெளிநாட்டு தனியார் வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையில் ஆகக் கூடிய பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பை பெறும் வகையில் உரிய இடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 திசெம்பர் முதல் 2015 யூலை வரை இந்த செயற்திட்டத்தின் கட்டங்கள் 02 மற்றும் 03 இல் 1000 பாலங்களில் 500 இற்கு மேற்பட்ட அளவில் ஒப்பந்த கம்பனியுடன் |

| | | | |
|---|---|---|---|
| | முறையான திட்டமொன்று காணப்படவில்லை. செயற்திட்ட பதவியணியினர் காணப்பட்ட போதிலும், ஒன்றிணைக்கப்பட்ட பாரிய அளவிலான ஒப்பந்தங்கள் (Turn Key) செயற்திட்டமாக அமுல்படுத்தும் இந்த செயற்திட்டம் தொடர்பாக போதியளவான பங்களிப்பு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த அமைச்சின் கீழ் 2016 யூன் முதல் செயற்திட்ட முகாமைத்துவ அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாலம் நிர்மாணிக்கப்பட்ட இடங்களை தெரிவு செய்யும் போது தற்போதைய மற்றும் எதிர்கால நலனாளிகளின் எண்ணிக்கை மற்றும் தனியார் காணிகள் தொர்பாக எதிர்வு கூறப்பட்ட இடங்கள் தெரிவு செய்யப்படுகின்றது. பாலத்தை தெரிவு செய்யும் திட்ட முறைமையில் மீண்டும் கவனம் செலுத்தி மிகவும் முறையான திட்டமொன்றின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |
| (ii) | டோக்கியோவின் டொய்ஸ் வங்கியிலிருந்து (Deutsche Bank) பெறப்பட்ட கடன் தொகையை பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட கிராமிய பால செயற்திட்டங்களின் II ஆம் கட்டத்தின் கீழ் 537 இரும்பு பாலங்களை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2018 இன் மூன்றாவது காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பல | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய செயற்பாடுகள் குழுவில் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் போது நாட்கள் நீடிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி 100 ஐக்கிய இராச்சிய பவுண்கள் பெறுமதியாக இருக்க வேண்டிய இந்த ஒப்பந்தம் நிர்மாணிக்கப்பட வேண்டிய குறித்த பாலங்களின் அளவைக காண்பிக்கப்படுகின்ற செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (iii) | உடன்படிக்கையின் பிரகாரம் பாலம் பொருத்தப்பட வேண்டிய இடங்களை இனங்காண்பதற்காக முறையான பொறிமுறையொன்று வடிவமைக்கப்படாதிருந்ததுடன், பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களை தீர்மானிக்கும் போது பாலம் ஒன்றுக்காக ஏற்படுகின்ற கிரயம் மற்றும் அந்த பாலத்திலிருந்து பயன் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை மற்றும் எதிர்காலத்தின் போது ஏற்படக் கூடிய முன்னேற்றங்களை கவனத்தில் கொண்டு போதியளவான கிரய நலன்களை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் இடங்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 100 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் காணப்படும் என்ற எதிர்பார்ப்பில் | அதிக கிரயத்தையுடைய இரும்பு பாலங்கள் ஆனமையால் முறையான ஆய்வொன்றின் மூலம் இடங்களை தெரிவு செய்யும் செயற்பாடொன்று உருவாக்கப்பட வேண்டும். | பாலங்களை இறக்குமதி செய்தல் மற்றும் அதற்காக உரிய கொடுப்பனவுகளை டொய்ஸ் வங்கி மூலம் மேற்கொள்ளுதல் பாலம் நிர்மாணிப்பதற்கு குறித்த இடமொன்றை இனங்கண்டு ஐக்கிய இராச்சியத்தின் எக்ஸ்போர்ட் கிரடிட் கரண்டி (Export Credit Guaranty ) திணைக்களத்திலிருந்து அதற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட பின்னராகும். மதிப்பீட்டிற்காக முன்னரே சாத்திய வள மதிப்பீட்டு வினாக்கொத்து மற்றும் சாத்திய வள ஆய்வு அறிக்கை மாதிரிகள் தயாரிக்கப்பட்டு மாகாண பொறியியலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தப்பட்டதா எனவும் பாலத்தின் கொங்கிரீட் நிர்மாணங்கள் தொடர்பாக எந்த விதமான நியம கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் இடம் பெற்றிருக்கவில்லை. | | |
| (iv) | இரும்பு பாலமொன்று தேவையற்றிருந்தமை, முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகைக்கு ஒப்பாக பிரதி பலனொன்று உரித்தற்று போகும் வகையில் மதகுகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய இடங்களில் பாரிய அளவில் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு தனியார் வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன் பணத்தில் ஆகக் கூடிய பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பை பெறக்கூடிய வகையில் இடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பாலங்களாகும். |
| (இ) | வளர்ச்சியடைந்து வருகின்ற வலயங்களின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம். (RIDEP) | | |
| (i) | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை நிறுவனத்தினால் ரூபா 20,622 மில்லியன் நிதி உதவி வழங்குவதின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வளர்ச்சியடைந்து வருகின்ற வலயங்களின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் தொகுதி 1 இன் மூலம் 224 கிராமிய வீதிகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 121 நீர்ப்பாசங்களை அபிவித்தி செய்வதற்கும் தொகுதி 2 இன் | அமைச்சரவை தீர்மானித்த காலப்பகுதியில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்த வேண்டும். | செயற்திட்டங்களை திட்டமிடும் போது ஆலோசனைச் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு பெறுகை நடவடிக்கைகள் முடிவடைவதற்கு 06 மாத காலமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவை பெறுகைக் குழு மூலம் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு 42 மாத காலமொன்று எடுத்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் குடிநீர் வசதிகளை விருத்தி செய்யும் 67 செயற்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2019 ஆம் ஆண்டில் அதில் குறிப்பிடப்பட்ட இலக்குகளுக்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாதிருந்தமையின் அடிப்படையில் செயலாற்றலை காண்பிப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ii) | செயற்திட்ட முகாமைத்துவ பணிக் கோவை (Project Memorandum) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரினால் பெறுகை கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனையின் பிரகாரம் செயற்திட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் இனங்காணப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளக கணக்காய்வாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | **ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுவூட்டும் செயற்திட்டம்** (PHSSP) | | |
| (i) | செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்காக சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதவியணியினரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் | பதவியணியினரை முறையாக நியமிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சினால் நியமிக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியினரை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் இந்த அமைச்சிற்குரிய அலகுகளுக்காக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2019 இன் ஆலோசனைகளுக்கு முரணாக தமது அமைச்சின் சேவையில் ஈடுபட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் பகுதிநேர அடிப்படையில் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ii) | செயற்திட்ட முகாமைத்துவ பணி கோவையின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 626 இன் பிரகாரம் வெளிநாட்டு உதவி செயற்திட்டத்திற்காக நிதிக் கூற்று தயாரிப்பதற்கு முடியுமான இரண்டாம் அட்டவணை முறைமையில் கணக்குப் புத்தகங்களை பேணிச் செல்வதற்கு தேவையான ஆலோசனைகள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் அதனை அவ்வாறு புத்தகங்களும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 626 இன் பிரகாரம் கணக்கு புத்தகங்கள் பேண வேண்டியிருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பணிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது வரையில் சகல மாகாண சபைகளுக்கும் நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | **நகர செயற்திட்டங்களுக்காக அடிப்படை வசதிகள் வழங்கும்** | | |

**செயற்திட்டம். (UPPF)**

| | | | |
|---|---|---|---|
| (i) | எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் அடிப்படை பணிகளை நிறைவேற்றுவதற்காக தொழில்நுட்ப உதவி செயற்திட்டமொன்றாக அமுல்படுத்தப்பட்ட நகர செயற்திட்டங்களுக்கான ஆரம்ப வசதிகளுக்காக ஐ. அ. டொலர் 05 மில்லியன் கடன் தொகையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்து. அந்த செயற்திட்டத்தின் பணிப்பாளருக்கு சம்பளம் செலுத்தும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட வேண்டிய சம்பள படி நிலையில் வைக்காமல் மாதத்திற்கு ரூபா 60,000 தொகை அதிகரித்து 2020 யூன் மாதம் வரையில் ரூபா 600,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு இனங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், மேலதிகமாக செலுத்துதல்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பளம் செலுத்துதல் தொடர்பாக தொடர்ந்தும் பரீட்சிக்கப்பட வேண்டியதாக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | செயற்திட்டத்தின் நாளாந்த நடவடிக்கைகளை செய்து கொள்வதற்கு தற்காலிக |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக புறநெகும செயற்திட்டத்தின் நிதி பகுப்பாய்வாளர் இந்த செயற்திட்டத்தின் கணக்காளராக பதிற்கடமை அடிப்படையின் கீழ் நியமிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 405,000 செலுத்தப்பட்டிருந்தது. | வேண்டியிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கையாக இந்த உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். சம்பளம் செலுத்துதல் தொடர்பாக தொடர்ந்தும் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுகாக தனியார் மதியுரைக் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 50.11 மில்லியன் நிலையப்படுத்துதல் முற்பணம் செலுத்தப்பட்ட போதிலும், ஆண்டின் போது எந்த செயல் முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாடுகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.. | 2019 ஆம் ஆண்டில் மதியுரை அலுவலகத்தின் மூலம் உப செயற்திட்ட முன்மொழிவுகளை இனங்காண்பதற்கு அபிவிருத்தி முன்மொழிவுகளில் தேவையினை மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | **புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணம் (LGESP)** | | |
| (i) | பிரதேச சபைகளின் அன்றாட நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு, செயல் நடைமுறைகளை இலகுபடுத்துவதற்கு உதவி செய்தல் மற்றும் பிரதேச சபை பிரஜைகளுக்கு சாதகமானதை ஏற்படுத்தும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பணத்திலிருந்து நிதி அளிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களை அபிவிருத்தி | வெளிநாட்டு கடன் பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டம் ஆனமையால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய பிரதேச சபையின் ஊழியர்களை ஆர்வமூட்டாமை, உள்ளக மற்றும் வெளியக இடம் மாற்றங்கள், ஏனைய மென்பொருளின் பயன்பாடு, பயிற்சி பெற்ற பதவியணியினர்களை பெற்று பயிற்சி பெறாத ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்காமை. அமைச்சின் உள்ளூராட்சி பிரிவு |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் (தொடர்புடைய) செயற்திட்டத்தின் கீழ்) குறைந்த வருமானம் பெறும் பிரதேச சபைகளுக்காக தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருள் தீர்வான ஈ-புறநெகும மென்பொருள்கள் 07 மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 137 பிரதேச சபைகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இரண்டிலும் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது 41 பிரதேச சபைகளில் 16 பிரதேச சபைகள் இந்த மென்பொருளை பயன்படுத்தாதிருந்தமையும், இந்த மென்பொருளை அமுல்படுத்துதல் எந்தவொரு உள்ளூராட்சி நிறுவனங்களாலும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மொடியூல்களுக்காக திட்டமிடப்பட்ட 04 பணிகளிலும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | உள்ளூராட்சி திணைக்களத்தில் மேற்பார்வை செய்யாமை. |
| (ii) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 332.19 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 பிரதேச சபைகளுக்கு கையளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டம் உள்நுழைவு வீதிகள், பகிர்ந்தளிக்கும் முறைமைகள் என்பன 30 மாதம் முதல் 57 மாதம் வரை விளைவற்று காணப்பட்டதுடன் ரூபா 16.49 மில்லியன் செலவில் | எதிர்பார்த்த பொருளாதார மற்றும் சமூக நலன்களை கைப்பற்றுவதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு அறிவுறுத்த வேண்டும். | ஆராய்ந்து கண்டறிந்து மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாகாண தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டு ஹெட்டிபொல பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட சுடலைக்கூடம் 36 மாதங்களுக்கு மேல் விளைவற்று காணப்பட்டது. | | |
| (iii) | ரூபா 513.73 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 பல்நோக்கு கட்டிடங்களும், ரூபா 18.90 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு நூலகமும், ரூபா 105.06 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 03 வாராந்த சந்தைகளும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணங்களில் எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரத்தோட்டை வாராந்த சந்தை கடைகளாக ஒதுக்கப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் திஸ்ஸமஹாராம மீன் சந்தை பழ வகை மொத்த வியாபாரிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வலல்லாவிட்ட பல்நோக்கு கட்டிடம் தொடர்பாக மாகாண அதிகார தரப்பினருடன் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருவதுடன் மற்றைய கட்டிடம் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட பஸ் நிலையம், பல்நோக்கு கட்டிடம், குடிநீர் செயற்திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய 16 உப செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்பார்த்த நலன்களை கைப்பற்றிக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்த்த நலன்களை கைப்பற்றிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் தொடர்ந்தும் பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உடபலாத நீர் உத்தேச திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக பிரதேச சபையினால் உப செயற்திட்டம் கையேற்கப்படாமையினால் குறைபாடுகளை சரி செய்வதற்கு ரூபா 9.3 மில்லியன் மேலதிக ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரினால் குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. அதாவது குறைபாடுகள் சரி செய்யப்படாதிருந்ததுடன் செயலாற்றல் பிணை முறியினை பணமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாற்றல் பிணை முறி 2020 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (vi) | செயற்திட்ட ஆரம்ப கட்டத்தின் போது ரூபா 282.36 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடபலாத, உடுதும்பர மற்றும் வில்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் 03 நீர் செயற்திட்டங்களின் குறைபாடுகளை சரி செய்வதற்காக புறநெகும இரண்டாம் கட்டத்தின் போது ரூபா 102 மில்லியன் தொகையான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்ட வடிவமைப்பு சார்ந்த நிர்மாணங்களில் குறைபாடுகள் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருக்குமாயின் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | பிரதேச உக்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம் (LDSP) | | |
| (i) | கடன் உடன்படிக்கையின் 2 ஆவது பட்டோலையின் D பகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள முறையில் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட உப செயற்திட்டங்களை தெரிவு செய்யாதிருக்கும் போது ஆரம்ப கையளித்தலுக்காக மாகாண சபைக்கு ரூபா 268.98 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 21 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. | தெரிவு செய்யப்பட்ட உப செயற்திட்டத்திற்காக விரைவாக அங்கீகாரத்தை வழங்கி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். | அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கட்டுநிதி விடுவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2017 நவம்பர் 20 ஆம் திகதிய 17/2708/706/129 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உலக வங்கியுடன் கையொப்பமிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படும் வரை நிகழ்ச்சி திட்டங்களின் செயற்திட்டங்களின் ஆரம்ப நடவடிக்கைகள் (Programmetic Project Preparation Facility – World Bank Funded Projects) நிறைவேற்றுவதற்கு ஐ. அ. டொலர் ரூபா 3 மில்லியன் தொகையான செயற்திட்டமொன்று தேசிய திட்டமிடல் செயற்திட்டத்தின் கீழ் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளங்களை மீள அறவிடுவதற்கும் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். | பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிப் பிரமானம் FR 71 படிவத்தில் சம்பள அளவும் ஒட்டு மொத்த செயற்திட்டத்தின் பெறுமதிக்கும் உரித்தாகும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சம்பளத்திற்காக ஏற்படும் |

அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காகவும் ஐ. அ. டொலர் 500,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் செயலாளரால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் மேற்கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்ற ஆரம்ப நடவடிக்கைகளுக்காக பதவியணியினர் அங்கீகாரம் ஒன்று கோரப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவியணியினர் அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் சம்பள படிநிலை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 01/2016, 01/2016(1) மற்றும் 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் டொலர் 05 மில்லியன் செயற்திட்ட பணிகள் பொதுவான கடமைகளின் கீழ் இருக்க வேண்டியதாகும். எனினும், பிரதேச சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்ட 2018 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2019 யூன் 30 வரை 06 உத்தியோகத்தர்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,637,110 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில்

செலவினங்கள் செயற்திட்டத்தின் கீழ் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவைகளின் படி அந்த திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளில் செலுத்த முடியாதிருந்தவைகளாகும்.

ரூபா 1,107,228 தொகை பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3.7 பெறுகைகள்**

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------- | ----------------------------------- |
| (அ) | **கம்பெக்டர் வாகனம் கொள்வனவு செய்தல்** | | |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தேசிய கேள்வி கோரல் நடைமுறைகளின் மூலம் 100 கம்பெக்டர் வாகனங்களை பெறுகை செய்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி தேசிய செய்தி பத்திரிகைகளில் உரிய பெறுகைகள் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் 4 ஆவது பந்தியில் “இந்த பெறுகை இலங்கையின் கேள்விதாரருக்கு திறக்கப்பட்டுள்ளது. பங்குடமை வியாபாரங்களும் விண்ணப்பிக்க முடியும்” என இலங்கை கேள்விதாரருக்கு மாத்திரம் வரையருக்கப்பட்டிருந்தது. எனினும், தேசிய முகவராண்மை | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனமொன்றை வருவிக்காமல் வெளிநாட்டு பிரயாண அனுமதிப் பத்தரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சீன நாட்டவருக்கு கேள்விப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | கேள்வி பதிவேட்டில் முதலாவது பகுதியில் கேள்விதாரருக்காக வழங்கப்பட்டுள்ள ஆலோசனை இலக்கம் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி தகவல் ஆவணத்தில் காண்பிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் வெளிநாட்டு கேள்விதாரருக்கு கேள்வி சமர்ப்பிக்கப்பட முடியும். எனினும், கேள்வி தகவல் ஆவணத்தில் வெளிநாட்டு கேள்விதாரர் தொடர்பாக குறிப்பிடப்படாதிருக்கும் போது வெளிநாட்டு கேள்விதாரருக்கு கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் சபையினால் கேள்வி சமர்ப்பித்தல் நிராகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) | கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட 14 கேள்விதாரர்களில் 04 பேர்களும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு முரணாக மேன்முறையீட்டு சபைக்கு முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு கேள்விதாரர் ஆனமையின் காரணமாக கேள்வி | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிராகரிப்பதற்கு முடியுமாக இருந்த போதும், எக்ஸ்இஸட்வை ஹெங்கொங் கம்பனி (XZY Hong Kong) மேன்முறையீட்டு சபையின் முறையீட்டில் சமர்ப்பித்த விடயங்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு கேள்விக்குரிய வழங்கல் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iv) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பெறுகைகள் சபையினால் தொழில்நுட்ப மற்றும் நிதி அனுபவங்கள் உறுதிப்படுத்தாமையின் காரணமாக கேள்வி நிராகரிக்கப்பட்டதாக கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது உள்நாட்டு முகவர் ஒருவர் இன்றி வெளிநாட்டு கம்பனிக்கு கேள்வி சமர்ப்பிக்க முடியாதிருந்தமை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவைப் போன்று பெறுகை சபையும் கேள்விதாரரின் அடிப்படைக் குறைபாடுகளை கைவிட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (v) | குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியின் கேள்வி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாதிருந்தமை | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வாகனங்களின் கூறுவிலையை தீர்மானிப்பதற்கு காரணமான உற்பத்தி செய்த நாடு, தொழில்நுட்ப பிரிவு, காலம் கடந்தமை, சேவைகள் மற்றும் உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை, வலுவாக உள்ளமை, பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் தொடர்பாக உள்ள நன்மதிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | |

(ஆ) **சொத்துக்கள் முகாமைத்துவத்திற்காக கணனி மென்பொருளொன்றை ஸ்தாபித்தல்.**

| | | |
|---|---|---|
| (i) அமைச்சின் பெறுகைக் குழுவினால் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக கணனி மென்பொருளொன்றை வழங்குதல் தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாக அறிவித்தல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையதளத்தில் பிரசுரிப்பதற்கும், இந்த ஒப்பந்தத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து அங்கீகாரம் பெறும் அதிகாரம் செயற்திட்ட பணிப்பாளருக்கு கையளிப்பதற்கும், தரத் தன்மை மற்றும் கிரய (CQS) அடிப்படையில் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் போன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை ஆலோசனைகளுக்கு இணங்கவும் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த ஆலோசனை நிறுவனங்களை நியமித்தல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகைகள், சட்டங்கள், விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வெளிநாட்டு உதவி செயற்திட்டம் ஆனமையால் கடன் வழங்கும் நிறுவனத்தின் பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். அதன் பிரகாரம் மேற்கொள்ளும் போது நடைமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.10 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகைகள் கோவையின் 2.8 ஆம் பந்தியின் ஆலோசனையின் பிரகாரம் தேசிய செய்திப் பத்திரிகைகளில் பெறுகைகள் அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படாமையின் காரணமாக எந்தவொரு உள்நாட்டு கேள்விதாரருக்கும் இதற்காக முன்வரும் இயலுமை கிடைத்திருக்கவில்லை. | | |
| (ii) | 2018 நவம்பர் 14 ஆம் திகதி கூட்டப்பட்ட பெறுகைகள் சபை அமெரிக்க டொலர் 179,983.50 தொகையில் (ரூபா 32.30 மில்லியன்) அவுஸ்ரேலிய கம்பனிக்கு இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்திற்கு கணனி மென்பொருளொன்று (தகவல் தொழில்நுட்ப தீர்வு) அறிமுகப்படுத்தும் போது அந்த மென்பொருளை அபிவிருத்தி செய்தல், ஸ்தாபித்தல், பயிற்சியளித்தல் உதவி மற்றும் பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ளுதல் தேவையாக இருந்த போதிலும், இந்த ஒப்பந்தத்தின் போது உதவி மற்றும் பராமரிப்பு சேவைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முதலீடு செய்யப்படுகின்ற தொகையில் இருந்து ஆகக் கூடிய நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மென்பொருளொன்றை வடிவமைத்தல், ஸ்தாபித்தல் மற்றும் பயிற்சி எனபன அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு தொடர்பான ஒப்பந்தத்தை உள்ளடக்கி இல்லாத காலம் மற்றும் மேலதிக பணம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும், அமுல்படுத்தியதன் பின்னர், ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்காக உதவுவதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மென்பொருளை அபிவிருத்தி செய்தல், ஸ்தாபித்தல், பயிற்சியளித்தல் போன்ற பணிகளுக்காக தரத்தன்மை மற்றும் கிரய அடிப்படை ஆலோசனை நிறுவனமொன்றை தெரிவு செய்தல் சரியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்விற்கு பதில் அளிக்கும் போது குறித்த சான்றிதழ்களுடன் பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகைகள் செயற்பாட்டு கோவையின் பிரகாரம் இவ்வாறான இலக்குகளுக்காக மிகவும் பொருத்தமானது CQS முறைமையாகும். மேலும் இந்த முறைமையை பின்பற்றுவதற்கு அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கோராதிருந்ததுடன் இதனை பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கியது ஆசிய அபிவிருத்தி வங்கியாகும். |
| (iv) | தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமுல்படுத்தப்படுகின்ற கணனி முறைமையின் ஆதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல் - 2018 இற்காக உடன்படிக்கையொன்று அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்த முறைமையின் II ஆம் கட்டத்தின் போது சொத்துக்கள் முகாமைத்துவ விடய நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கியிருக்கும் போது 07 பிரதேச சபைகள் இவ்வாறான செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு | தகவல்களை ஆய்வு செய்து முறையாக செயற்படுத்த வேண்டும். | உள்ளூராட்சி முறைமைக்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் முகாமைத்துவ விடயங்கள் மேவுகை செய்யப்படாதிருந்தமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசனைக் கம்பனியொன்றாக ஒப்பந்தகாரரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | | |
| (v) | 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புறநெகும செயற்திட்டம் 2020 யூன் மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் காலத்தில் அமுல்படுத்தப்பட வேண்டிய சரியான செயற்திட்டமொன்று 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. | பயனற்ற செலவினமாக இல்லாதிருப்பதற்காக தேவையான வழிமுறைகள் எனன் என தெளிவாக காண்பிக்கப்படல் வேண்டும். | 2012 ஆம் ஆண்டு முதல் ICTA நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கம்பனியுடன் அமைச்சு இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருந்த போதும், வெற்றிகரமான மென்பொருளொன்று சொத்துக்கள் முகாமைத்துவத்திற்காக வடிவமைப்பதற்கு முடியாதிருந்தது. எனினும், ஆதனவரி, கணக்குகள் போன்ற ஏனைய துறைகளில் கணனி மென்பொருள் மூலம் இது வரையிலும் மேவுகை செய்யப்பட்டுள்ளது. செயற்திட்ட கால எல்லையில் குறித்த செயற்திட்டமொன்றாக 07 பிரதேச சபைகள் இந்த சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருளையும் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் ஏனைய பிரதேச சபைகளுக்காக இந்த மென்பொருளை ஸ்தாபித்தல் அமைச்சின் |

| | | |
|---|---|---|
| | | மூலம் மேற்கொள்ளப்பட முடியும். செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் இறுதியில் மற்றும் அவை அமைச்சின் விடயப்பரப்பிற்குள் அமுல்படுத்தப்படுகின்றமையினால் இதனையும் அமைச்சின் பணிப்பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

(இ) காலி மாவட்ட செயலகத்திற்காக புதிய கேட்போர் கூடமொன்று 720 நாட்களில் நிர்மானிப்பதற்காக நிர்மாணக் கம்பனியுடன் ரூபா 2,656 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதன் பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபா 1,178,386 தொகை செலுத்தி மண் பரிசோதனை அறிக்கையொன்று 2018 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மண்ணின் நிலைமை நலிவானதாக இருந்தமை மற்றும் பெறுகைகள் கட்டத்தின் கிரய மதிப்பீட்டின் தூண் வேலைகள் (Pilling work), கெங்கிரீட் வேலைகள், காணியினை விரிவுபடுத்தும் வேலைகள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிலத்தின் தற்காலிகமாக செலவினத்திற்காக (Provisional Sum) ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 150 | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண நிலம் தெற்கு அதிவேக வீதியை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட மண் மற்றும் கற்களால் நிரப்பப்பட்டிருந்தது. அதனால் கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் போது நிலத்தின் தன்மை தொடர்பாக கேள்விதாரருக்கு கேள்வி சமர்ப்பிப்பதற்காக மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு சில இடங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

மில்லியன் தொகை போதியளவில் இல்லாதிருந்தமையால் மேலதிகமாக இன்னும் ரூபா 498 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தகாரர் வேலைத் தளத்தை கையேற்றதன் பின்னர் நிலம் தொடர்பாக நல்ல நிலைமையில் நம்பிக்கையாக இருந்ததாக என அறிந்துகொள்வதற்கு ஆரம்ப மண் பரிசோதனையொன்று மாத்திரம் போதியளவில் இல்லாதிருந்தமையால் ஒப்பந்தகாரரினால் வேறு மண் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த நிலமும் மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் போது ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட நிலைமையினை விட வேறுபாடுகள் கணிசமாக ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் திட்டமிடப்பட்டு நிர்மாணித்தல் (Design & Building) ஆக இருந்ததுடன் மண் நிரப்பப்பட்ட காணியொன்றாக இருந்தமையால் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தற்காலிக ஒதுக்கங்கள் போதியளவில் இல்லாதிருந்தமை

| | | | |
|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்தப்பட்டமையால் மேலதிக நிதி ஏற்பாடு ரூபா 498 மில்லியன் தேவையாக இருந்தமைக்காக மதிப்பீடு தயாரிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. |
| (ii) | ஒப்பந்தத்தை ஆரம்பிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,700 மில்லியனாக இருந்த போதிலும், ஒப்பந்தம் ரூபா 2,658.9 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது 56 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறு ஆரம்பத்தில் இணங்கியிருந்த விடயப்பரப்பு அவ்வப்போது மாற்றப்பட்டமை மற்றும் கிரயம் உயர்வடைந்து சென்றதன் மூலம் முன்னைய பெறுகை நடவடிக்கைகள் வெற்றிகரமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விடயப்பரப்பு மாற்றமடைவதற்கு பிரதானமாக மண்ணில் காணப்படுகின்ற படைகள் தாக்கமளித்திருந்தன. அத்திவாரம் வெட்டுவதற்காக தற்காலிகமாக ஒதுக்கப்பட்ட நிதி போதியளவில் இல்லாமையால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மண் பரிசோதனையின் பின்னரே இந்த ஒப்பந்தம் திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் (Design & Building) முறைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையினால் விரிவானதொரு மண் பரிசோதனையொன்று செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு கையளித்து அத்திவாரத்தை திட்டமிடும் போது ஏற்பட்ட மொத்த பொறுப்பும் அவருக்கு கையளித்தல் பொதுவான முறைமையாகும். அவ்வாறின்றி அவ்வாறான |

| | | | |
|---|---|---|---|
| | | | விரிவான மண் பரிசோதனையொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் மேற்கூறப்பட்ட அந்த பரிசோதனையின் தரவுகள் தொடர்பாக முழுமையான பொறுப்பு அரசாங்கத்திற்கு கையளிக்கப்படும். எந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு நிலத்தின் படைகளினால் தூண் நிர்மாணித்தல் (Pilling) மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக ஏற்படுகின்ற செலவினத் தொகையில் ஏற்பட்ட தற்காலிகமாக ஒதுக்கப்பட்ட தொகை போதியளவில் இல்லை. அமைச்சரவையின் அங்கீகாரத்தில் ஏற்பட்ட இந்த தொகை ரூபா 498 மில்லியனினால் அதிகரிக்கப்பட்ட தொகையாகும். எனினும், ஒப்பந்தகாரருக்கு மொத்த தொகையுமல்லாமல் செய்யப்பட்ட வேலையின் அளவு அளவிடப்பட்டதன் பின்னர் மாத்திரமே செலுத்தப்பட்டது. |
| (iii) | தேசிய போட்டியாளர் கேள்வி நடைமுறைகளின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் தொடர்பு 5:3:2 இன் கீழ் காண்பிக்கப்பட்ட பெறுகை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பத்தில் 45 நாள் காலமொன்று கேள்வி காலமாக வரையரையாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த கால எல்லை அவ்வப்போது நீடிக்கப்பட்டமையினால் மேலதிகமாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தலை பிரசுரிப்பதற்கு ரூபா 224,250 தொகை மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | | அறிவித்தல் பிரசுரித்தல் அதிக செலவினத்தை உடையதாக இருந்த போதிலும், அதனை விரிவுபடுத்திய போட்டியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமை யால் சிக்கனத்தின் மூலம் பதிவழிக்க முடியும், என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அவ்வாறு அறிவித்தல் பிரசுரிப்பதன் மூலம் பெறுகை நடைமுறையின் வெளிப்படையான தன்மை மற்றும் பொதுவான தன்மையையும் பேணி பாதுகாக்க முடியும். |
| (iv) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி திறக்கும் பொறுப்பு பெறுகைக் குழுவிற்கு உரியதாக இருந்ததுடன் பெறுகைக் குழுவிற்கு அந்த அதிகாரம் பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு அங்கத்தவர்களுடன் கூடிய கேள்வி திறத்தல் குழுவிற்கு கையளிக்க முடியும். எவ்வாறாயினும் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் குழு நியமிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகை குழுவின் அங்கத்தவர் ஒருவரான அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரத்தின் மூலம் அந்த கேள்வி திறத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வளர்ச்சியடைந்து வருகின்ற வலயங்களின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நிதி குத்தகை அடிப்படையில் 10 கெப் வாகனங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் செயற்திட்டத்தின் பாவணைக்காக அமைச்சிற்காக வழங்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்று மற்றும் மோட்டார் வண்டியொன்று பயனற்று காணப்பட்டதுடன் மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவற்று காணப்படுகின்ற வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.9 நிதி மேசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான பெறுகை நடைமுறைகள் இன்றி பெறுகைத் தீர்மானமொன்று எடுத்து நிதிப் பிரமாணம் 137(1), (2), (3), (4) மற்றும் 138 இன் ஏற்பாடுகள் தொடர்பாக கவனமொன்றை செலுத்தாது ''ஈ - உள்ளூராட்சி'' கணனி முறைமையில் உதவியாளர் மற்றும் | செலவினங்களை அங்கீகரிக்கும் போது உறுதிப்படுத்தும் போதும் இடம்பெற்றுள்ள கவனமின்மை தொர்பாக முறையான பிரகாரம் | இந்த பெறுகை தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானம் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தினால் (ICTA) |

| | | |
|---|---|---|
| பராமரிப்பு சேவைக்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 9.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு ஆரம்பம் வரையிலும் செயற்பாடின்றி காணப்பட்ட ‘‘ஈ - உள்ளுராட்சி’’ கணனி முறைமைக்காக உதவியாளர் மற்றும் பராமரிப்பு சேவைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்கப்பட்டுள்ள பரிந்துரை மற்றும் ஏனைய விடயங்களை கவனத்தில் கொண்டு உரிய செலுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.10 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 22 வாகன விபத்துக்கள் 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 06 வாகன விபத்துக்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 10 வாகன விபத்துக்களும் தொடர்பான தகவல்கள் நிதி கூற்றுக்களின் குறிப்பு II இன் கீழ் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் வருகின்ற பதிவேட்டில் பதிவழித்தல் மற்றும் அறவிடல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினால் அந்த விபத்துக்கள் 2019 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்படவில்லை.<br>2019 இன் புத்தகங்களில் பதிவழித்தல் கூற்றில் கைத்தவறினால் உள்ளடக்க முடியாத தகவல்கள் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற நிதி கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 08 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தின் மதிப்பீட்டு பெறுமதி கவனத்தில் கொள்ளப்படாது அதன் பின்னர் பழுதுபார்க்கப்பட்ட தொகை மற்றும் அறவிடப்பட்ட தொகை என்பவற்றிக்கிடையிலான பெறுமதி நட்டமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் பழுதுபார்க்கப்பட்ட தொகை என்பவற்றுக்கிடையே ரூபா 1,934,099 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனமொன்று விபத்துக்குள்ளான சந்தர்ப்பமொன்றில் வாகனத்தின் வெளிநபர்களுக்காக மாத்திரம் நட்டம் ஏற்பட்டிருந்தால் வெளிநபர்களினால் பரீட்சிக்கப்பட்ட குறித்த மதிப்பீட்டு பெறுமதியொன்று வழங்கப்பட வேண்டும். அவ்வாறான இழப்புக்கள் பழுதுபார்த்தலை செய்யும் போது பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி அனேகமாக சமமாக இருக்கும். உள்ளக இழப்புக்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் குறித்த ரீதியில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பெற முடியாதிருந்தமையால் பழுதுபார்த்தல் செலவினம் ஆரம்ப மதிப்பீட்டிற்கு இணையாக கணிசமான அளவு குறைவடையும் சந்தர்ப்பம் காணப்பட்டன. |

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இரண்டாம் நகர அபிவிருத்தி செயற்திட்டம் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்காக அமெரிக்க ஐக்கிய டொலர் 5 மில்லியன் கடன் தொகையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக முன்மொழிவுடன் அமைச்சரைக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, 2019 மார்ச் 10 ஆம் திகதி ரூபா 690,000 செலவில் மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும், அந்த அறிவித்தலில் கோரப்பட்ட விண்ணப்பங்களில் செயற்திட்ட பணிப்பாளர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தமையால் செய்திப் பத்திரிகையில் அறிவித்தலை பிரசுரிப்பதற்காக ஏற்பட்ட ரூபா 690,000 செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | அரசாங்கத்திற்கு நட்டமொன்று ஏற்படுகின்றதா என ஆராய்ந்து பார்த்து எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் நிதியளிப்புடன் வெளிநாட்டு தனியார் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடனையும் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட 15 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த செயற்திட்டங்களில் 2 இற்காக மாத்திரம் உள்ளக கணக்காய்வாளர் சேர்க்கப்பட்டிருந்தார். அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக 2 உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், அதில் ஒரு பதவிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் தொடர்பாக போதியளவான | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் செயற்திட்ட உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மீள் அமைக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதிய DMA/IA/2017/Project Audit Circular ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டத்திற்காக இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் வருடமொன்றுக்கு தேசிய செயற்பாடுகள் குழு கூட்டம் 06 நடத்த வேண்டியிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக 02 கூட்டங்கள் வீதம் மாத்திரம் நடாத்தப்பட்டன. தேசிய செயற்பாடுகள் குழு கூட்டத்தின் போது செயற்திட்ட வேலை திட்டமிடல், செயற்திட்ட பாதீடு, செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன அங்கீகரித்தல் இடம் | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் தேசிய செயற்பாடுகள் குழு செயற்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பெறாதிருந்ததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தேசிய செயற்பாடுகள் குழு கூட்டங்களின் அறிக்கையிடல்களும் உரிய செயற்திட்டத்தின் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**4. மனித வள முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------- | ------------------------------------ |
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 பெப்ரவரி 26 ஆம் திகதிய DMS/சீ/17/வெலும/iv ஆம் இலக்க கடிதத்தில் இந்த அமைச்சின் கீழ் செயற்திட்ட பிரிவிற்கு பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டம் முடிவடைந்ததும் பதவியணியினருகாக படிகள் முடிவுறுத்தபட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களைப் போல ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட பிரிவின் பணிப் பொறுப்புக்கள் முடிவடைந்ததும் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களை மாற்றுவதற்கும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவைக்காலத்தை மூன்று |

| | | | |
|---|---|---|---|
| | | | வருடங்களில் முடிவறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்ட பிரிவின் சேவைக்காக சேர்க்கப்பட்ட சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பெறுகை நிபுணர்களிடமிருந்ததும் பொறியியல் மதியுரை (நீர்ப் பாசனம்) கீழும் செயற்திட்டங்களை வினைத்திறனாக செய்வதற்கு அல்லது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குரியதாக மீளாய்வாண்டில் எந்தவித பங்களிப்பும் கிடைக்கப் பெறாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பதவியணியினரை திருத்தம் செய்து தேவையான கடமைகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த பிரிவின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களின் சேவையிலும் ஆகக் கூடிய பயன்பாட்டினை பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் பெதவான தொழில் விபரங்களுக்கு மேலதிகமாக அந்தந்த செயற்திட்டங்களுக்காக 2020 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் தொழில்நுட்ப கணக்காய்வொன்றைச் செய்யும் அதிகாரத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 மே 09 ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட செயற்திட்ட பிரிவில் நியமிக்கபட்ட பொறியியல் ஆலோசகர் (வீதி) 2019 யூலை 24 ஆம் திகதி முதல் காலி மாவட்ட செயலகத்திற்கு நியமிக்கப்பட்டு ரூபா 1,260,000 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட பிரிவிற்குரிய கடமைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்ட சம்பளம் தொடர்பான புலனாய்வு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். | கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு நியமிக்கப்பட்டு மாவட்ட செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |